**STC. No. 311/2022**
PW .1
Name : திரு.சரவண ராஜா த/பெ. சேகர்
Date: 11.05.2023

திருநெல்வேலி மாவட்டம், நான்குநேரி தாலுகா, ஏர்வாடி கிராமம், கோவில்வாசல் ரதவீதி கதவு எண் 56ஏ/125 என்ற முகவரியில் குடியிருந்து வரும் சரவணராஜா, (வயது32/2023 ) த/பெ.சேகர் ஆகிய நான் சத்திய பிரமாணத்தின் பேரில் கூறுவது என்னவென்றால்,

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். எனது வாக்குமூலத்ததை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். இதனுடன் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

**புகார்தாரர் ஆவணங்கள்**

| | |
|---|---|
| ம.ஆ.1. | 28.02.2022 ஆம் தேதியிட்டு எதிரி வழங்கிய ரூ.2,00,000 வங்கி காசோலை எண்.525263 அசல். |
| ம.ஆ.2. | 01.03.2022 ஆம் தேதியிட்ட புகார்தாரர் வங்கி வழங்கிய மெமோ. |
| ம.ஆ.3 | 15.03.2022 தேதியிட்ட புகார்தாரர் வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் தபால் ரசீது. |
| ம.ஆ.4. | எதிரி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை |

இத்துடன் புகாரின் படி உத்தரவிடுமாறு கேட்டுகொள்கிறேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுகிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.